



தி.மு.க. பொறியாளர் அணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் நிர்வாகிகள் தேர்வு முறையை கழகத் தலைவர் தொடங்கி வைத்தார். தி.மு.க. பொறியாளர் அணி தனது உறுப்பினர் சேர்க்கை மற்றும் பகுதி / நகர / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகள் தேர்வினை தமிழ்நாடெங்கும் தொடங்கி உள்ளது. மாநிலப் பொறியாளர் அணி தங்களது அணியில் பொறுப்புக்கு விண்ணப்பித்திட QR Code வசதியுடன் கூடிய இணையப் பக்கத்தை வெளியிட்டுள்ளது. அந்த விண்ணப்பப் படிவத்துடன் கூடிய உறுப்பினர் சேர்க்கையை கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அறிவாலயத்தில் முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா உடன் இருந்தனர்.



## தேசத் தந்தை காணவிரும்பிய

# சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து காந்தியடிகளுக்கு காணிக்கையாக்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, அக். 4-

உத்தமர் காந்தியடிகளின் 156-வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தேசத் தந்தை காண விரும்பிய சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து அவருக்கு காணிக்கையாக்குவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 156வது பிறந்த நாளையொட்டி சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திய பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அகிம்சை, உண்மை, மதநல்லிணக்கம் ஆகியவற்றின் முகமாகவே திகழ்பவர் காந்தியடிகள். அவரை இந்தியாவின் ஆன்மா என்றாலும் மிகையாகாது.**

**காந்தியார் வாழ்ந்த காலத்தைக் காட்டிலும் தற்போதைய சூழலில்தான் அவரது தேவை மிகுதியாக உள்ளது. இந்திய மக்களைப் பிளவுபடுத்தி, அப்பிரிவினைத் தீயில் குளிர்காயும் சக்திகளை வீழ்த்தி, தேசத்தந்தை காணவிரும்பிய சகோதரத்துவ இந்தியாவை மீண்டும் மலரச் செய்து, அவருக்குக் காணிக்கை ஆக்குவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சென்னை அம்பத்தூர் ஆவின் பால் பண்ணையில் நேற்று (03.10.2024) பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் ஆவின் பால் பொருட்கள் தயாரிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது ஆவின் மேலாண்மை இயக்குநர் சு.வினீத், இணை நிர்வாக இயக்குநர் திருமதி க.பொற்கொடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னை, ஐ.சி.எப், அம்பேத்கர் அரங்கில் சென்னை கிழக்கு மாவட்டம், தி.மு.க. மகளிர் தொண்டரணி சார்பில் தமிழர்களின் சுடர் திராவிடர் தொடர் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவில் “திராவிட நெடுந்தொடர் பெண்ணின் உயர்வே மண்ணின் உயர்வு! பெருமை சேர்ப்பதே திராவிட உணர்வு!! என்ற தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், மாவட்ட துணை அமைப்பாளர் திருமதி.சுதாதீனதயாளன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக துணைப் பொது செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா ராஜன் , வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி , பகுதி செயலாளர் வே.வாசு, மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், அம்பத்தூர் 96வது வட்ட செயலாளர் எ.வேதா, தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.